# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 06.12.2024 கதிர் 72







## ‘ஐரெக்’கின் 60 ஆண்டு நிறைவு



(யாழ்ப்பாணம், டிச. 11)

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் 60ஆவது ஆண்டு நினைவு நாளைக் குறிக்கும் வகையில், இன்று ஐரெக் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண இந்தியத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இன்று நண்பகல் யாழ்ப்பாணக் கலாச்சார மையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி. சிவஞானம், பரதம் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா, மற்றும் ஐரெக் திட்டத்தின் கீழ் இந்தியாவில் பயிற்சி பெற்ற பல்வேறு துறைகளின் நிர்வாகிகள், நிபுணர்கள், பழைய மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இன்றைய நிகழ்ச்சி, புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர் சுப்ரமணிய பாரதியின் 143 ஆம் பிறந்த நாள் நினைவு கூரலுடன் இணைந்து கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய 7➤

## யானை தாக்கி ஒருவர் மரணம்

வவுனியா, டிச. 11

வவுனியா, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கி முன்னாள் கிராம சேவையாளர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முன்னாள் கிராம அலுவலரான எஸ். மோகனகாந்தி என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மாடு மேய்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த முன்னாள் கிராம அலுவலரை வேலங்குளம் இராணுவ முகாமுக்கு அண்மையில் வீதிக்கு வந்த யானை தாக்கியுள்ளது. அதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரழந்துள்ளார்.

வீதிக்கு வந்த யானை சுமார் மூன்று மணி நேரத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் நின்று அட்டகாசம் புரிந்ததாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். இதனால் அந்த வீதி வழியாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## நாட்டில் 10,000 பேருக்கு எலிக்காய்ச்சல்



கொழும்பு, டிச. 11

நாட்டில் சுமார் பத்தாயிரம் பேர் வரை எலிக்காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் குமுது வீரகோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியினுள் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையே இதுவாகும் என்றும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் எலிக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மடங்குகளில் அதிகரித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் எலிக் காய்ச்சல்?

### அவதானமாக இருக்கக் கோருகிறார் பணிப்பாளர்!



**யாழ்ப்பாணம், டிச. 11**

**யாழ்ப்பாணத்தில் பரவி வரும் ஒரு வகைக் காய்ச்சலின் காரணமாக இது வரை ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், இந்தக் காய்ச்சல் எலிக் காய்ச்சலாக இருக்கலாமென்றும் பொதுமக்களை எச்சரித்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், நோயின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் அனைவரையும் அவதானமாகச் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.** 7➤

## தரம் 5 வினாத்தாள் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, டிச. 11

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் மூன்று வினாக்கள் முன்கூட்டியே கசிந்தனையால் வினாத்தாள் பரீட்சையை மீண்டும் நடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணையை இன்று உயர் நீதிமன்றம் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் இன்று அழைக்கப்பட்டன. 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு முறையாக நிறைவுறாததால் மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் 16ம் திகதிக்கு ஒத்திவைத்து நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

இந்த மூன்று மனுக்களும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மனு கடந்த முறை 7➤

## பிரித்தானியவின் முதன்மைச் செயலாளர் யாழ். மாவட்ட செயலகத்துக்கு வருகை!



யாழ்ப்பாணம், டிச. 11

பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி இன்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்து, அரசாங்க அதிபரைச் சந்தித்து சமகால நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இன்று காலை 08.45 அளவில் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்த முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடியை, யாழ். மாவட்ட 8➤

## மழை தொடரும்!

கொழும்பு, டிச. 11

இன்று முதல் வடக்கு மாகாணத்தில் பலத்த மழைக்கு வாய்ப்புகள் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாகக் குறைந்த காற்றழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் காணப்படுவதுடன், அது அடுத்த 24 மணித்தியாலங்களில் மேற்கு - வடமேற்குத் திசையில் நகர்ந்து இலங்கையின் வடக்கு கடற்கரைக்கு அருகில் தமிழக கடற்கரையை நெருங்க வாய்ப்பு உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாகத் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வடக்குமாகாணத்தில் சில இடங்களில் 100 மி.மீ இற்கும் அதிகளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, தென், ஊவா,மேல் மற்றும் 8➤

# பாடசாலை மாணவர்களுக்கென சீனா வழங்கிய நன்கொடை கல்வி அமைச்சரிடம் கையளிப்பு!

(கொழும்பு, டிச 11.)

இலங்கையிலுள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும், பிரிவெனாக்களிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்குவதற்கென சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைத் துணிகள், பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்தின் சர்வதேச கொள்கலன் முனையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பிரதாய பூர்வ கையளிப்பு நிகழ்வில் வைத்து, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் துணிப் பொதிகளைப் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கையளித்தார்.



இந்த நிகழ்வில், கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, சீனத் தூதரக அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அதிகாரிகள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2025 ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலுமுள்ள அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி கற்கும் 46 இலட்சத்து 40 ஆயிரத்து 86 மாணவர்களின் சீருடைக்குத் தேவையான சுமார் 11 ஆயிரத்து 817 மில்லியன் மீற்றர் துணியை அன்பளிப்பாக வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன்வந்திருந்தது. சீனாவின் முன்மொழிவை ஏற்றுக் கொள்வதற்குக் கடந்த மாதம் நடைபெற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன்படி, மூன்று தொகுதிகளாக அனுப்பி வைக்கப்பட்ட சீருடைத் துணிகளின் முதல் இரண்டு தொகுதிகளும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. மூன்றாவது தொகுதி எதிர்வரும் 25 ஆம் திகதி வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ - 07)



## மீண்டும் மழையுடன் கூடிய காலநிலையால் மீனவர்கள் கடலுக்கு செல்லாதிருக்க பணிப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாகவிருத்தியடைந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் காணப்படுவதுடன் அது அடுத்த 24 மணித்தியாலங்களில் மேற்கு - வடமேற்குத் திசையில் இலங்கையின்வடக்குக் கரையை அண்டியதாக தமிழ்நாடு கரையை நோக்கி நகரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரை யான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் இன்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை மற்றும் மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கடற் பரப்புகளில் காற்றானது வடகிழக்கு முதல் வட மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடும்.

காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து காங்கேசந்துறை ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாகமுல்லைத்தீவு வரையான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக அல்லது மிகக் கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## அலையில் அடித்துச் செல்லப்பட்ட இருவரை காப்பாற்றிய பொலிசார்

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவில் கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டு பிரஜை ஒருவரும் பெண்ணொருவரும் அலையில் அடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதுடன், சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர்காப்பு உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு தம்பதிகளை மீட்டு உடனடியாக சிகிச்சை அளித்துள்ளனர்.

உயிர் தப்பிய வெளிநாட்டவர்கள் 29 வயதான ருமேனிய பிரஜை எனவும், பெண் 30 வயதான சீன பிரஜை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஹுங்கல்ல பொலிஸ் உயிர்காப்பு பிரிவைச் சேர்ந்த பொலிசாரே வெளிநாட்டு பிரஜைகளை காப்பாற்றியுள்ளனர்.

## வீடொன்று முற்றாக எரிந்து சேதம்!

வாத்துவ, பொதுப்பிட்டிய பகுதியில் வீடொன்று இன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயினால் வீடு முற்றாக எரிந்து சேதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதி மக்கள் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ மளமளவெனப் பரவியதையடுத்து, அப்பகுதி மக்கள் தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

குறித்த வீட்டின் பெண் ஒருவர் விளக்கை ஏற்றி விட்டுச் சென்றதால், அது கீழே விழுந்து தீப்பிடித்திருக்கலாம் என காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும், தீ விபத்துக்கான முழுமையான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாத்துவ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## மூன்று வருட கிரிக்கெட் தடை மூன்று மாதமாக குறைந்தது

இலங்கை கிரிக்கெட் வீரர் நிரோஷன் திக்வெல்லவின் 03 வருட கிரிக்கெட் தடை 3 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் அவர் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட தகுதி பெற்றுள்ளார்.

முடிவடைந்த லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் போது ஊக்கமருந்து உட்கொண்டதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது.

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் (ஞடுயுனுயு) நடத்திய விசாரணையில் இது தெரியவந்ததையடுத்து, மறு அறிவித்தல் வரை நிரோஷன் திக்வெல்லவை அனைத்து கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து தடை செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இந்த தடைக்கு எதிராக திக்வெல்ல தனது சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீடு செய்தார். அந்த முறையீட்டின் பிரகாரம் திக்வெல்ல இந்த நிவாரணத்தைப் பெற்றுள்ளார்.




நிரோஷன் திக்வெல்ல சார்பில் சட்டத்தரணி சுமிந்த பெரேரா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ரணில் பிரேமதிலக்க ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.



2025 பட்ஜட்:

## கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செலவு தொடர்பில் கலந்துரையாடல்

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு அங்கமாக கிராமிய அபி விருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பிலான வரவு செலவு திட்ட பரிந்துரைகள் குறித்த கலந்துரையாடல் இன்று (11) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி, சமூக பாது காப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் கலாநிதி உபாலி பன்னி லகே, ஜனாதிபதியின் செயலாளர் கலா நிதி சனத் நந்திக குமாநாயக்க, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செய லாளர் மலர்மதி கங்காதரன், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறி வர்தன உட்பட அமைச்சுக்களின் உயர் அதிகாரிகளும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## கஜேந்திரகுமாரும், செல்வமும் கிளிநொச்சியில் கலந்துரையாடல்!

### - பேரவையின் தீர்வுத் திட்ட வரைபு குறித்து ஆராய்வு -



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோவின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எம்.பியை நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து, இனிவரும் காலங்களிலேனும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்க வேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி, தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இது பற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி., ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோர் இந்தத் தீர்வுத் திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வறானதொரு பின்னணியில் கடந்த வாரம் சிறீதரன் எம்.பியை அவரது யாழ். இல்லத்தில் சந்தித்த கஜேந்திரகுமார் எம்.பி., புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம், அதனை முன்னிறுத்திய அடுத்தகட்ட நடவடிக்கைகள், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சிநேக பூர்வமாகக் கலந்துரையாடியிருந்தார்.

## இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை

நாட்டின் இருவேறு இடங்களில் இரண்டு கொலைகள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜாலா பகுதியில் வாக்குவாதம் அதிகரித்து நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொல்லப்பட்டார்.

வலப்பனை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ் வாறு உயிரிழந்துள்ளார். ஓய்வு அறையில் மது அருந்திக் கொண்டிருந்த இரு கடை ஊழியர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் இந்த கொலை நடந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது.

கொலையை செய்த சந்தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசார ணைகளை ஜல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை லக்கல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லகேகல பிரதேசத்தில் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். குடும்ப தகராறு முற்றியதையடுத்து கணவரே இந்த கொலையை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

லகேகல, நாரங்கமுவ பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் லக்கல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், லக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## மிதி வெடி

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எண்டு சும்மாவே சொன்னவங்கள்....

போன கிழமையும் பெரியாசுப்பத்திரிப் பஞ்சாயத்துத் தான், இந்த முறையும் அதை விடேலாத மாதிரியாப் போச்சு...

எல்லாம் கேள்விப்பட்டிருப்பியள் தானே?

அந்தப் பொடி.... மன்னிக்கவேணும்... அந்த "ஹொனரபிள்" அப் ணபிடித் தான் எண்டது ஊரறிஞ்ச விசியம் தானே? அதைப் பற்றி நான் கதைக்க வரேல்ல...

ஆனா.. அவர் செய்ய முறை பிழை எண்டாலும், கேக்கப் போன விசியம் சரி தானே?

கிட்டத்தட்ட ஒரு குட்டி அரசாங்கம் தானே உங்க நடந்து கொண்டிருக்குது.... எண்டைக்கோ ஒரு நாளைக்கு எங்களுக்கும் "பேர்மனற்" கிடைக்கும் எண்டு நம்பித்தானே எல்லாரும் தொண்டர் அடிப் படையில வேலை செய்யப் போறவை?

தொண்டராப் படிப்பிக்கப் போனவை எல்லாரையும், நிரந்தரமாக்க வெளிக்கிட்ட நேரத்தில என்ன நடந்தது? அமைச்சர் ஒருத்தரின்ட எடுப்புகள் – சாய்ப்புகள் எல்லாம் வைச்சிருந்த ஆக்களுக்கும் "பேர்மனற்" எடுத்துக் குடுத்தவையெல்லோ? அதில எத்தின பேர் தொண்டரா வேலை செய்தவை எண்டது வேற கதை பாருங்கோ.....

நான் சொல்ல வந்தது உதையில்லப் பாருங்கோ....

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில செய்யிற எல்லா நல்ல விசியங்களும் ஒரு சிலரிண்ட சின்னத் தனமான விசியங்களால இல்லாமல் போகுதெல்லோ.. அதைத் தான் சொல்லுறன்.

பெரியாசுப்பத்திரிக்குள்ள படம் எடுக்கக் கூடாது எண்டு ஒரு சட்டம் இருக்குதாம்... இலங்கையில எந்தப் பகுதியிலயும் இல்லாத சட்டம்... நான் கேக்கிறது என்னெண்டா உந்தச் சட்டம் எந்த நாடாளுமன்றத்தால இயற்றப்பட்டது? எத்தனையாம் ஆண்டு வர்தமானியில வெளிவந்தது?

இல்லத் தெரியாமல் தான் கேக்கிறன்....?

நீங்கள் வைத்தியம் பாக்கிற இடத்துக்குள்ள படம் எடுக்கக் கூடாது எண்டது ஒரு வெளிப்படையான புரிந்துணர்வு.. ஆனா... வைத்திய சாலை வளாகத்துக்குள்ளயே படம் எடுக்கக் கூடாது எண்டதில என்ன ஞாயம் கிடக்கு?

இது என்ன உங்கட "பெட் ரூமே" நாங்கள் உங்கட "பிரைவேசி"ஐப் படம் எடுக்கிறதுக்கு? இது பொது இடம் பாருங்கோ... பொது மக்களான நாங்கள் கட்டுற வரிப்பணத்தில இயங்குற – எங்கட வரியில சம்பளம் வேண்டுற நீங்கள், வெளிப்படைத் தன்மை இருக்கிற ஒரு அரசாங்கத்தின்ர காலத்தில இருந்து கொண்டு, படமெடாத எண்டு சொன்னால்..... நீங்கள் உங்க ஏதோ களவு செய்யுறியள் எண்டெல்லோ நினைக்க வேண்டிக் கிடக்கு....

பொதுமக்கள் வந்து போற இடத்தில பொது மக்களுக்கு இடைஞ்சல் வாற நாலு விடயங்களை ஆதாரத்தோட முறைப்பட வேணும் எண்டா அதுக்குப் படம் பிடிக்கத் தானே வேணும்? நீங்கள் வாசலில கட்டி வைச்சிருக்கிறவைக்குக் கதைக்கப் பேசத் தெரியாது – ஆர் எவை–யெண்டில்ல... எல்லாரிலயும் வாய் வைப்பினம்... அவையில பிளை எண்டு உங்களிட்ட வந்தா, அவையை விட மேலால நீங்கள் ஞாயம் பறையிறியள்.... நாங்கள் ஆதாரம் சேர்த்தாத் தானே "மாண்புமிகு"களிட்ட முறையிட முடியும்?

வளாகத்துக்குள்ளயே படம் எடுக்கக் கூடாது எண்டது அப்பட்டமான உரிமை மீறல் பாருங்கோ... அதில அதை நடைமுறைப்படுத்துறதுக்குக் காட்டுற சண்டித்தனம் அதை விட மோசம்....

அதென்ன... ? நீங்க மட்டும் நிண்டால்... "போட்டோ"... "பார்க்கில" நடந்தால் "போட்டோ"... நாங்கள் "ஹொஸ்பிட்டல்" எண்டு "போட்டோ" போட்டால் பிழையோ...?

என்னவோ... எனக்குத் தெரியேல்ல... ஆனா... வந்துட்டுப் போன "ஹொனரபிள்" சட்டமும் படிச்சவர்.... சட்டம் தெரிஞ்சவாவைச் செயலாளரா வச்சும் இருக்கிறார்.. அந்தாளுக்கு "மெடிக்கல் அட்மின்" வேற நல்லாத் தெரியும்... என்ன நடக்குதெண்டு பொறுத்திருந்து தான் பாப்பமே....?

ஒரு சின்னக் "கிளரிபிஃகேஷன்".... ஆசுபத்திரியளில (வைத்தியம் பாக்கிற இடங்கள் தவிர) "போன்" பாவிக்கப்படாது... "போட்டோ எடுக்கப்படாது எண்ட சட்டம் இருந்தா எனக்கொருக்கா ஆரும் காட்டித் தாங்கோ.... அவதானமா இருக்கலாமெல்லே..?

- நரமுனி -

# பிரிந்து செல்லும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் இந்தியா கூட்டணியில் வெடித்த சர்ச்சை!

பாராளுமன்றத்துக்கு கடந்த மே மாதம் தேர்தல் நடந்தபோது பா.ஜ.க.வை தோற்கடிக்கும் நோக்கத்துடன் காங்கிரஸ், தி.மு.க, திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், உத்தவ் தாக்கரேயின் சிவசேனா, ராஷ்டிரிய ஜனதா தளம், தேசிய மாநாட்டு கட்சி, சமாஜ்வாடி, கம்யூனிஸ்டுகள் உட்பட 20-க்கும் மேற்பட்ட கட்சிகள் ஒருங்கிணைந்து இந்தியக் கூட்டணியை உருவாக்கின.

இந்த கூட்டணியில் தொடக்கத்தில் இருந்தே கட்சிகளிடையே கருத்து வேறுபாடு நிலவி வந்த நிலையில் மராட்டியம், ஜார்க்கண்ட் மாநிலங்களில் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி சிறப்பாக செயல்படவில்லை என்ற அதிருப்தி இந்தியக் கூட்டணி கட்சி தலைவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

மராட்டியத்தில் ராகுல் காந்தி தேர்தல் பிரச்சாரம் செய்தபோது கையில் ஒரு சிறிய சட்டப் புத்தகத்தை வைத்துக் கொண்டு, "மோடி இந்திய அரசியலமைப்பு சட்டத்தை அழிக்க திட்ட மிடுகிறார்" என்று பிரச்சாரம் செய்தார்.

மேலும் அதானிக்கும் மோடிக்கும் ரகசிய தொடர்பு இருப்பதாகவும், அதானிக்கு நாட்டை மோடி தாரைவார்த்து விட்டதாகவும் பிரச்சாரம் செய்தார். என்றாலும் மராட்டிய தேர்தலில் காங்கிரசுக்கு படுதோல்வியே மிஞ்சியது.

இதனையடுத்து கடந்த 25ஆம் திகதி முதல் பாராளுமன்றம் கூடிய நாளில் இருந்து தினமும் ராகுல் காந்தி பாராளுமன்றத்தில் அதானி பிரச்சனையை எழுப்பி சபையை நடத்த விடாமல் செய்வதோடு பாராளுமன்றத்துக்கு வெளியே வந்து தினமும் போராட்டத்தை நடத்துகிறார். இதனால் முக்கிய பிரச்சனைகளை பாராளுமன்றத்தில் பேச இயலவில்லை என்று இந்தியக் கூட்டணி கட்சி தலைவர்களிடம் ராகுல் மீது அதிருப்தி எழுந்துள்ளது.

இந்த நிலையில் மேற்கு வங்காள முதல்-மந்திரியும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி இந்தியக் கூட்ட ணிக்கு தலைமையேற்று வழி நடத்த தயார் என்று அறிவித்துள்ளார். இது இந்தியக் கூட்டணியில் மிகப்பெரிய சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது.

மம்தா பானர்ஜிக்கு தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ் யாதவ், ராஷ்டீரிய ஜனதா தளம் லல்லு பிரசாத் யாதவ் ஆகியோர் ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள்.

இதேவேளை இந்தியா கூட்டணி யில் உள்ள சிறிய கட்சிகளும் மம்தா பானர்ஜிக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். சமாஜ்வாடி கட்சித் தலைவர்கள் நேரடியாகவே ராகுலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். இந்தியா கூட்டணியை வழி நடத்தும் தலைவராக ராகுலை ஏற்க இயலாது என்று கூறி உள்ளனர்.

பா.ஜ.க. கூட்டணி, இந்தியா கூட்டணி என இரண்டிலும் இடம் பெறாத ஆந்திர மாநில கட்சியான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியும் மம்தா பானர்ஜிக்கு ஆதரவை தெரிவித்துள்ளது. அந்த கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மம்தா திறமையானவர். அவரால் நிச்சயமாக எதிர்க் கட்சிகள் அணியை திறம்பட வழிநடத்த முடியும்" என்று கூறியுள்ளது.

இந்தியக் கூட்டணியில் ஏற்பட்டுள்ள இந்த குழப்ப நிலை காரணமாக அந்த கூட்டணிக்கு தலைமை ஏற்பது யார் என்பதில் சர்ச்சை மேலும் விரிவடைந்துள்ளது. ராகுலின் தனிச்சசையான முடிவு காரணமாக இந்தியக் கூட்டணியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருவதாக சரத்பவார், லல்லுபிரசாத் யாதவ், அகிலேஷ் யாதவ் ஆகியோர் கருதுகிறார்கள்.

இது இந்தியக் கூட்டணியில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை தொடர்ந்து அதிகரிக்கச் செய்துள்ளது. இந்த விஷயத்தில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சி என்ன முடிவு எடுக்கும் என்பதில் கேள்விக்குறி எழுந்துள்ளது.

இந்த நிலையில் விரைவில் டெல்லி சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால் ஆம்ஆத்மி கட்சி அதற்கு தயாராகி வருகிறது. வேட்பாளர்களையும் அந்த கட்சி அறிவித்து விட்டது. டெல்லி தேர்தலில் காங்கி ரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க மாட்டோம் என்று ஆம்ஆத்மி கூறியுள்ளது.

இதன் மூலம் இந்தியா கூட்டணியின் நோக்கம் சிதைந்து வருவதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். எந்த நேரத்திலும் இந்தியா கூட்டணி மிகப் பெரிய உடைந்து சிதறும் என்று கருதுகிறார்கள்.

இதற்கிடையே காங்கிரஸ் மூத்த தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியா கூட்டணியில் இருந்து விலகி காங்கிரஸ் கட்சி தனித்து களம் இறங்குவதுதான் கட்சியின் எதிர்காலத்துக்கு நல்லது என்று கூறி வருகிறார்கள்.

மாநில சட்டசபை தேர்தல்களில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதன் மூலம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சி அடைவதாக அவர்கள் கருதுகிறார்கள்.


குறிப்பாக 200-க்கும் மேற்பட்ட தொகுதிகள் உள்ள மாநிலங்களில் வெறும் 30 அல்லது 40 இடங்களில் மட்டும் போட்டியிடுவதன் மூலம் காங்கிரஸ் நிர்வாகிகள் மனம் தளர்ந்து போகிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு எம்.எல்.ஏ. ஆக முடியாத நிலை நீடிக்கிறது.



எனவேதான் மாநில காங்கிரஸ் நிர்வாகிகளில் பலரும் கட்சியை விட்டு விலகிச் செல்கிறார்கள். இதை தடுத்து காங்கிரசை வலுப்படுத்த வேண்டுமானால் இந்தியக் கூட்டணியில் இடம் பெறாமல் தனித்து போட்டியிடுவதுதான் நல்லது என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் வலியுறுத்த தொடங்கி உள்ளனர்.

இதன் காரணமாக இந்தியா கூட்டணியின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாக மாறி வருகிறது.

## மெகுல் சோக்சியின் சொத்துக்கள் ஏலத்தில் நீதிமன்றம் வழங்கிய அனுமதி!



பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ. 13 ஆயிரம் கோடி கடன் வாங்கி மோசடி செய்ததாக குஜராத்தை சேர்ந்த பிரபல தொழில் அதிபர் மெகுல் சோக்சி மீது புகார் எழுந்தது.

இந்நிலையில் கடந்த 2018-ம் ஆண்டு அவர் வெளிநாட்டிற்கு தப்பி ஓடினார். அவர் தற்போது ஆன்டிகுவாவில் வசித்து வருவதாக கூறப்படுகிறது. குறித்த மோசடி தொடர்பாக மெகுல் சோக்சி மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது.

மேலும் அவருக்கு சொந்தமான ரூ. 2,565 கோடி மதிப்புள்ள சொத்துக்களையும் பறிமுதல் செய்யப்பட்டு இது தொடர்பான வழக்கு மும்பையில் உள்ள சிறப்பு பண மோசடி தடுப்பு சட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த வழக்கில் மெகுல் சோக்சிக்கு எதிராக இதுவரை 3 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை விற்பதற்கு அமலாக்கத்துறைக்கு அனுமதி அளித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து மெகுல் சோக்சியின் ரூ. 2,500 கோடி மதிப்பிலான சொத்துக்கள் ஏலம் விடப்படுகிறது.

இதில் கிழக்கு மும்பை சாண்டா குரூசில் கெனி டவரில் உள்ள 6 அடுக்கு மாடி குடியிருப்புகள், டெல்லி மஹர்ஷத்ராவில் உள்ள சாண்டா குரூஸ் எலக்ட்ரானிக்ஸ் எக்ஸ்போர்ட் மண்டலத்தில் அமைந்துள்ள 2 தொழிற்சாலைகளும் அடங்கும்.

# டங்ஸ்டன் சுரங்கம் விவகாரம்: மத்திய அரசின் நிலைப்பாடு என்ன?

மதுரை மாவட்டம் மேலூர் அருகே அரிட்டாபட்டி, நரசிங்கம்பட்டி மலைப்பகுதியில் இருந்து சுற்றி உள்ள 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைப்பதற்கு இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இந்த அனுமதியை மத்திய அரசு ரத்து செய்யக்கோரி முல்லை பெரியாறு ஒரு போக பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் கடந்த 29ஆம் திகதி மேலூரில் கண்டன ஆர்ப்பாட்டம், கடையடைப்பு நடந்தது. மேலும் தொடர்ந்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், தமிழ்நாடு சட்டசபை கூட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. அப்போது மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு எதிராக தனித்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தனித்தீர்மானம் மீது சட்டசபையில் விவாதம் நடைபெற்றதையடுத்து தனித்தீர்மானம், பரபரப்பான விவாதங்களுக்குப் பிறகு அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



இதையடுத்து மதுரை டங்ஸ்டன் சுரங்க அனுமதிக்கு எதிராக தமிழ்நாடு சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தனித் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், தமிழ்நாடு சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட தனித்தீர்மானத்தை மத்திய சுரங்க அமைச்சகம் பிரதமர் அலுவலகத்தின் பார்வைக்கு அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனை தொடர்ந்து, மத்திய சுரங்கத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி பிரதமரை சந்தித்து டங்ஸ்டன் விவகாரம் தொடர்பாக ஆலோசனை நடத்த உள்ளதாக கூறப்படுகிறது. இந்த ஆலோசனையில் சுரங்க உரிமத்தை ரத்து செய்வதா? ஒத்தி வைப்பதா? என்பது குறித்து ஆலோசிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# மெய் நிகர் உலகின் இருண்ட பக்கம்

ஒவ்வொரு நபரின் வாழ்விலும் இருபத்தி நான்கு மணி நேரமும் இண்டர்நெட் பயன்பாடு இடம் பெறும் தற்போதைய யுகத்தில், தனிநபர்களிடையே உள்ள தொடர்பு இணைய உலகத்தில் நடைபெறுகிறது. இது இணைய அடிமையாதல் கோளாறு (Internet addiction disorder IAD), அல்லது அளவுக்கு அதிகமான இணைய பயன் பாடு, சிக்கலான கணினி ஃ ஸ்மார்ட் போன் பயன்பாடு ஆகியவற்றில் முடிவடையும். இணைய அடிமையாதல் கோளாறு என்பது ஒன்லைன் தொடர்பான ஒரு நடத்தை. இது அந்நபரின் அன்றாட வாழ்க்கையில் குறுக்கிடுகிறது. இதனால் அவரின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் அவரின் பணிச் சூழலிலும் மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இது இணைய சார்பு மற்றும் இணைய கட்டாயம் எனவும் அழைக்கப்படுகின்றது.

தனியாக இருக்கும் பெண்கள் சலிப்பின் காரணமாக இணையத்தில் முக்கியமாக சமூக ஊடகங்களில் அடிமையாகி விடுகின்றனர். அவர்கள் தங்கள் சமூக மீடியா சுயவிவரத்தில் தங்கள் நிலையைப் புதுப்பிப்பது, மற்றவர்களின் நிலையைச் சரிபார்ப்பது, அவர்கள் விருப்ப எண்ணிக்கை மற்றும் தங்களுக்கு பகிரப்பட்ட செய்திகளை சரிபார்ப்பது என மூழ்கிவிடுகின்றனர். இது ஒரு நபருக்கு தொல்லையாக மாறுவது மட்டுமின்றி, அவரது மன மற்றும் உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது.

> நீங்கள் இணையத்திற்கு அடிமையாகி விட்டால், உங்கள் உடல் மற்றும் மன நலம் பாதிப்படைவதோடு, பல விதமான இணைய அச்சுறுத்தல் கயவாழ்க்கை ஆபத்துக்குள்ளாகும் வாய்ப்பிருக்கிறது.



அலுவலகத்தில் அல்லது குடும்ப வாழ்வில் மன அழுத்தத்தில் உள்ள பலர் தங்கள் மன அழுத்தத்தை குறைக்க இணையத்தில் தங்கியிருக்கிறார்கள், மேலும் அந்த மன அழுத்தத்தைக் குறைக்க இதை ஓர் எளிதான வழியாகக் கருதுகின்றனர்.

பெரும்பாலானவர்கள் சமூக ஊடகங்களில் அடிமையாக இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் சமூக ஊடக சுயவிவரத்தை சரிபார்ப்பது அல்லது தற்போது முக்கிய பொழுது போக்கான போலிப் புகைப்படங்களை புதுப்பிப்பது போன்றவற்றில் தங்கள் நாளையே தொடங்குகின்றனர். தங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் படம்பிடித்து சமூக ஊடகங்களில் காட்டுவது மற்றும் அதிகமான லைக்குகளும், ஷேர்களும் தங்கள் பதிவுக்கு பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த இணைய உலகின் தற்போதைய சூழ்நிலையில் இவர்கள் மிகவும் எதிர்பார்ப்பது இதையே.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஷோப்பிங் செய்வது மிகவும் சுவாரசியமான ஒன்றாகும். ஒன்லைன் ஷோப்பிங் பெண்களுக்கு, உலகம் முழுமைக்குமான விருப்பங்களை திறந்து விட்டிருக்கிறது. அவர்கள் வாங்குகிறார்களோ இல்லையோ, பல்வேறு ஒன்லைன் ஷோப்பிங் வலைத்தளங்களில் பல்வேறு பொருள்களை தேடும் வண்ணம் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இணையத்தில் தாங்கள் செலவிடும் நேரத்தை குறைப்பதற்கு சிரமப்படுகின்றனர்.

பெரும்பாலானோர் ஒன்லைன் கேமிங்கிற்கும் கூட அடிமையாக இருக்கின்றனர். இவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் நிஜ உலகில் உள்ள சமூகத்தில் பழகுவதற்கு பதிலாக ஒன்லைன் விளையாட்டுகளில் செலவிடுகிறார்கள்.

எல்லோரும் சாட்டிங்கை பயன்படுத்துகிறார்கள். ஆனால், ஒரு சிலரால் அதை நிறுத்த முடிவதில்லை. இது எல்லா வகை அரட்டையும் உள்ளடக்குகிறது. பல சமயங்களில், சமூக தொடர்புகளில் இருந்து விலகி இம் மெய்நிகர் உலகில் ஆறுதலும்



இன்பமும் பெறுகின்றனர்.

ஸ்மார்ட் ஃபோனுக்கு முற்றிலும் அடிமையானவர்கள் அதை பயன்படுத்தும் போது நலமுடன் இருப்பது போன்று அல்லது பரபரப்பான உணர்வைக்கொண்டிருப்பார்கள். ஆனால்,

அந்த நடவடிக்கையினை நிறுத்த இயலாமல்

ஸ்மார்ட்போனில் இன்னும் அதிக நேரம் இருக்க ஏங்குவார்கள்.

நீங்கள் இணையத்திற்கு அடிமையாகி விட்டால், உங்கள் உடல் மற்றும் மன நலம் பாதிப்படைவதோடு, பலவிதமான இணைய அச்சுறுத்தல்களால் உங்கள் வாழ்க்கை ஆபத்துக்குள்ளாகும் வாய்ப்பிருக்கிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# நியூசிலாந்தில் வேட்டை நாய் பந்தயத்துக்கு விதிக்கப்பட்ட புதிய தடை!



நியூசிலாந்தில் வேட்டை நாய்களை பயன்படுத்தி ஓட்டப்பந்தயம் நடத்துவது அந்நாட்டின் கலாசாரங்களில் ஒன்றாக உள்ளது. இதற்காக 'கிரே ஹவுண்டு' என்னும் வேட்டை நாய்கள் இன குட்டிகளை சிறுவயதில் இருந்து வளர்த்து அதற்காக தயார்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் அண்மையில் இந்த வேட்டை நாய்கள் பந்தயதுக்கு தடை விதிக்கக்கோரி விலங்குகள் நல அமைப்புகள் போராட்டம் நடத்தின. போதைப்பொருள் கொடுத்தும், மிக கொடூரமாக துன்புறுத்தப்பட்டும் இந்த பந்தயத்துக்கு அவை தயார்படுத்தப்படுவதாக புகார்கள் எழுந்தன.

இதனை தொடர்ந்து நியூசிலாந்து பாராளுமன்றத்தில் வேட்டை நாய் பந்தயத்துக்கு தடை விதிக்கும் வகையிலான புதிய மசோதா தாக்கல் செய்யப்பட்டு பெரும்பான்மையான எம்.பி.க்கள் ஆதரவுடன் நிறைவேறியது. இதனால் அங்கு வேட்டை நாய்கள் பந்தயத்துக்கு நிரத்தர தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இந்த பந்தயம் மிக பிரபலம் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் வெளிநாட்டினருக்கு பிறக்கும் குழந்தைக்கு குடியுரிமை கிடையாது- டிரம்ப் அதிரடி!





வாஷிங்டன், டிசெ.11

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் வருகிற ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

இதற்கிடையே தனது 2ஆவது முறை ஆட்சியில் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து டிரம்ப் ஆலோசனை நடத்தி வருகிறார். குறிப்பாக சட்ட விரோத குடியேற்றத்தை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் அமெரிக்காவில் வெளிநாட்டினருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கும் சட்டத்தை நீக்க டிரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

அமெரிக்க அரசியலமைப் பின 14ஆவது திருத்தத்தின் படி, பெற்றோரின் குடியுரிமையைப் பொருட்படுத்தாமல், அதன் எல்லைக்குள் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குகிறது.

150 ஆண்டு கால சட்டத்தை மாற்றிமைக்க டிரம்ப் முடிவு செய்துள்ளார். ஏற்கனவே டிரம்ப் அளித்த பேட்டி ஒன்றில், இச்சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். இந்த அமைப்பு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. அமெரிக்க குடிமகனாக மாறுவதற்கு கடுமையான தரநிலைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரம்பின் இந்த முடிவால் அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மியான்மரில் 4.7 ரிக்டரில் பதிவான நிலநடுக்கம்!

இந்திய எல்லையை ஒட்டிய மியான்மரில் இன்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

குறித்த நிலநடுக்கம் ரிக்டரில் 4.7 ஆக பதிவாகி உள்ளது. பூமியில் இருந்து 99.4 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மியான்மர் நிலநடுக்கம் குறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இன்று (டிசம்பர் 11) காலை 6.55 மணி அளவில் மியான்மரின் மாவ்லிக்-இல் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.




## வெளிநாடு செல்ல தயாரான தென்கொரிய அதிபருக்கு தடை!

தென்கொரியாவில் அதிபர் யூன் சுக்-இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம் தென்கொரியாவில் இராணுவ அவசர நிலை பிரகடனத்தை அதிபர் யூன் சுக்-இயோல் அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனையடுத்து அவசர நிலை கைவிடப்பட்டது. எனினும் அவசர நிலையை செயல்படுத்தியதற்காக அதிபர் பதவி விலக கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இந்நிலையில் நாட்டு மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

எனினும், அவருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. மற்றொரு பக்கம் அவசர நிலை பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால், யூன் சுக்-இயோல் தப்பிச் செல்லாமல் இருக்க வெளிநாடுகளுக்கு பயணம் செய்ய அவருக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.



# சிரியாவில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்ட 75 இந்தியர்கள்!

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் பஷார் அல் ஆசாத் தலைமையிலான ஆட்சியை கவிழ்த்துவிட்டு ஆட்சி அமைக்க உள்ளனர். இதன் காரணமாக அந்நாட்டில் அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அந்நாட்டில் இருந்து 75 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வணிக விமானங்கள் மூலம் இந்தியாவுக்கு திரும்பவுள்ளனர் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவித்திருக்கின்றது.

மீட்கப்பட்டவர்களில் ஜம்மு காஷ்மீரை சேர்ந்த 44 ஜைரீன்கள் அடங்குவர். இவர்கள் சைதா ஜைனாபில் சிக்கியிருந்தனர். சிரியாவில் சிக்கித் தவித்த இந்தியர்கள் கோரிக்கையை ஏற்கும் வகையில், அங்குள்ள பாதுகாப்பு விடயங்களை கருத்தில் கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியர்களை மீட்கும் பணிகளை டமாஸ்கஸ் மற்றும் பெய்ரூட்டில் உள்ள இந்திய தூதரகங்கள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட நிலையில் முதற்கட்டமாக 75 பேர் மீட்கப்பட்டுள்ள போதிலும், சில இந்தியர்கள் சிரியாவில் உள்ளனர்.

சிரியாவில் உள்ள இந்தியர்கள் டமாஸ்கஸில் உள்ள தூதரகத்துடன் +963 993385973 என்ற உதவி எண்ணிலும், வாட்ஸ்அப்பிலும், மற்றும் hoc.damascus@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் தொடர்பில் இருக்குமாறு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய அதிபர் புதினை சந்தித்த இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்!

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மூன்று நாள் அரசு முறை பயணமாக ரஷ்யாவிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் தலைநகர் மாஸ்கோவில் உள்ள அதிபர் மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்தியா - ரஷ்யா இடையிலான ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான 21-வது கூட்டத்தில் கலந்து கொண்டார்.

குறித்த கூட்டம் நிறைவுற்ற பிறகு அமைச்சர் ராஜ்நாத் சிங் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை நேரில் சந்தித்து பேசினார். இதன்போது ரஷ்ய அதிபர் புதின் மற்றும் அமைச்சர் ராஜ்நநாத் சிங் இரு நாடுகள் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

தொடர்ந்து பிரதமர் மோடி சார்பில் அதிபர் புதினுக்கு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்தார். முன்னதாக பிரதமர் மோடி ரஷ்ய பயணம் மேற்கொண்டு அதிபர் புதினை சந்தித்த நிலையில், தற்போது பாதுகாப்பு அமைச்சர் அங்கு பயணம் மேற்கொண்டு இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தையின் போது, "நமது நாடுகளுக்கு இடையிலான நட்புறவு மிக உயர்ந்த மலையை விட உயர்ந்தது மற்றும் ஆழமான கடலை விடவும் ஆழமானது. இந்தியா தனது ரஷ்ய நண்பர்களுக்கு எப்போதும் துணை நிற்கும். எதிர்காலத்திலும் இது நிச்சயம் தொடரும்," என்று அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.



# உள்ளூராட்சி மன்றங்களில் மாற்றம் தேவை வடக்கு ஆளுநர் வேதநாயகன் எதிர்பார்ப்பு!

(பருத்தித்துறை, டிச. 11)

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடையவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மாத நிகழ்வும், வாசிப்பு மாத நிகழ்வு மற்றும் பண்பாட்டு பெருவிழாவும் பருத்தித்துறை எஸ்.எஸ். மண்டபத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றிபோது "தமிழர்களுக்கு என்று தனிச் சிறப்பான பண்பாடுகள் இருக்கின்றன. அவை இன்று அருகி வருகின்றன. அவற்றைக் கட்டிக் காப்பதற்காகவே இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவை வரவேற்றகப்பட வேண்டும் – ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் ஊடாக எமது பண்பாடுகள் காக்கப்படுவதையும் உறுதிப்படுத்தவேண்டும். குறிப்பாக வரவேற்பு, விருந்தோம்பல், நன்றி கூறல் என்பன எமது பண்பாட்டின் அடிப்படைகள். அவற்றை விட்டு நாம் இன்று வெகு தூரம் சென்று விட்டோமா என்ற அச்சம் ஏற்படுகின்றது.

அரச திணைக்களங்களை நாடி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்கள் சென்றால், சில திணைக்களங்களில் அவர்களை வரவேற்பதற்கு யாருமில்லை. அது தவறானது. பொதுமக்களை நாடிச் சென்று நாம் சேவை செய்யவேண்டும். விரைவான, தரமான, அன்பான சேவையே மக்கள் சேவை. அதைச் செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களங்களும் முன்வரவேண்டும்.

எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும். நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சிலர் வந்தார்கள். ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள். அவர்களிடம் கேட்டபோது, முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் கையூட்டு எதிர்பார்க்கின்றார்கள்



என்று சொன்னார்கள். அது அன்றைய நிலைமை.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அவற்றுக்கு முற்றிலும் எதிரானது. பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்கவேண்டும். எமது உள்ளூராட்சிமன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயற்படவேண்டும். அவர்களை அலைக்கழிக்கக்கூடாது. எமது மாகாணத்தை நாம் அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப்பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்" என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்குப் பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது. இக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்றனர். எல்லா இறப்புக்களும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும், டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இக்காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந் நோய்க் கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ள நீருடன் தொடுகை ஏற்படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்ட தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக் கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

* காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

* தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

* தற்போதைய காலப்பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

* வயல்கள் சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்து கொள்ள வேண்டும்.

* கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

* கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.

* வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.

* தற்போதைய காலப்பகுதியில்வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

* தற்போது நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (ஐ-05)

## தரம் 5 வினாத்தாள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்ட போது, முன்கூட்டியே வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் மூன்று கேள்விகளை உள்ளடக்கிய முதல்வினாத் தாளுக்கான மறு பரீட்சையை நடத்த வேண்டாம் எனப் பரிந்துரைத்துள்ள அமைச்சரவை, கசிந்ததாகக் கூறப்படும் மூன்று வினாக்களுக்கும் பரீட்சையில் தோற்றிய ஒவ்வொரு மாணவருக்கும் இலவச புள்ளிகளை வழங்குமாறு பரிந்துரைத்துள்ளதாகவும் சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார். (ஐ)

## 'ஐரெக்'கின் 60 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகம், ஐரெக் திட்டம், இலங்கையின் அரசு அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்ததைக் குறிப்பிட்டு, இந்தியாவில் உள்ள 100க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பயிற்சி செயல் முறைகளைப் பாராட்டினார். குறிப்பாக விவசாயத் துறையில் பலர் இதைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தியதுடன், வடமாகாண வளர்ச்சிக்காக தொடர்ந்தும் இந்திய உதவியை வேண்டிக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா, சுப்ரமணிய பாரதியின் பார்வை மற்றும் இந்தியாவின் விண்வெளி, அணு நுட்பம் போன்ற முன்னேற்றங்களைப் பாராட்டினார். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிந்தைய வளர்ச்சிப் பயணத்தை "வியத்தகு இந்தியா" என வர்ணித்ததோடு, ஐரெக் போன்ற திறன் மேம்பாட்டு திட்டங்கள், இலங்கையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்றார். (இ)

## மெய்நிகர் ......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைய அடிமைத்தனத்தை தவிர்க்க, உங்கள் இணைய பயன்பாட்டிற்கு நேர வரம்புகளை அமையுங்கள்..

உங்கள் செல்போன் ஃ இண்டர்நெட் பயன்பாட்டினை பின்தொடர்ந்து, நாளுக்கு நாளுக்கு நாள் அதனை குறைக்க அறிவுறுத்தும் செயலியை நிறுவுங்கள்..

நீண்ட நேரம் இணையத்தைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்த, உங்கள் நண்பர்கள் ஃ குடும்பத்தினரின் உதவியைப் பெற முடியும்.

கணினி கேம்களை நீக்குதல் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு வலை தளங்களில் இருந்து, குறைந்தது ஒன்று அல்லது இரண்டு மாதத்திற்கு விலகி இருக்க முயற்சி செய்யுங்கள்.

இணையத்தை பயன்படுத்த நேரத்தை அமைக்கவும், ஆனால் அதை மீறாதீர்கள்.

கட்டுரைகள் வாசிப்பது, இணையத்தில் தேடுவது, வீடியோக்களைப் பார்ப்பது, மின்னஞ்சல்களை மடிக்கணனிக்கு அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்கு மாறுங்கள் .

செயலி மற்றும் மின்னஞ்சல்களின் அறிவிப்புகளை அணைக்கவும்.

அடிமைப்படுத்தகூடிய வலைத்தளங்களில் இருந்து தள்ளி இருக்க முயற்சியுங்கள் .

பாடம், வேலை சம்பந்தப்பட்ட புத்தகங்கள், பத்திரிகை வாசிப்புக்கு மாறுங்கள். இது உங்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும்.

நீங்கள் இணையத்தில் இல்லாவிட்டால், நீங்கள் மிச்சப்படுத்தக்கூடிய பணத்தைப் பற்றி சிந்தியுங்கள்.

நீங்கள் இணையத்தைப் குறைவாகப் பயன்படுத்தும்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான காரணங்களை பட்டியலிடுங்கள்.

இணையம் சார்ந்த சாதனங்களை படுக்கையறைகளில் இருந்து நீக்குங்கள்.

இணையத்தில் உள்ள பொழுது பலர் தங்கள் தூக்கத்தை இழந்து, தூக்க முறைமகளை பாழ்படுத்துகின்றனர். உங்கள் தூக்க முறைமையை ஒழுங்கு படுத்துங்கள். இது உங்களுக்கு நன்மை பயக்கும் ஏனெனில் இது உங்களை ஒழுக்கத்துடனும் சுய கட்டுப்பாடுடனும் இருக்க உதவுகிறது.






# கொழும்பு துறைமுக மேற்கு முனைய மேம்பாடு அமெரிக்க ஒப்பந்தத்திலிருந்து விலகிய அதானி

கொழும்பு, டிச11

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவுடனான 553 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் இருந்து அதானி குழுமம் விலகியுள்ளது.

அதானி குழுமத்தின் நிறுவனர் கவுதம் அதானி மீது அமெரிக்க சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்த பின்னணியில் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அந்த நிறுவனம் விலகியுள்ளது.

இருப்பினும், மேற்கு முனையத்தின் அபிவிருத்தியை அதானி குழுமம் அதன் உள் மூலதன கையிருப்பைப் பயன்படுத்தி மேற்கொள்ளவுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் எதிர்பார்த்திருந்த 553 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தம் கைவிடப்பட்டுள்ளதாக அதானி துறைமுகங்கள் மற்றும் விசேட பொருளாதார வலய நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதானி குழுமம் தனது உள் மூலதன இருப்புக்களை கொழும்பு மேற்கு சர்வதேச முனைய திட்டத்திற்கு பயன்படுத்தவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட நிறுவனத்தின் பெரும்பங்கு அதானி குழுமத்திற்கு சொந்தமானது.

இந்த திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க அமெரிக்கா கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்தது. ஆனால்



அதானி குழுமத்தின் நிறுவனர் கவுதம் அதானி மீது அமெரிக்க அமெரிக்க சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ததால், அதற்கான நிதி உதவி பெறுவதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டது.

இத்தகைய பின்னணியில், உரிய கடன் ஒப்பந்தத்தில் இருந்து அதானி குழுமம் விலகியுள்ளது. (ஐ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகை வெளியீடு







கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு சிறப்பிதழாக அமைந்த கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நேற்று (10) காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வ அம்பிகை நந்தகுமரனும் கௌரவ விருந்தினராக கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், கலாசாலை சிவன் ஆலயப் பிரதம குரு சிவசிறி பா. செல்வசேனக்குருக்கள், டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் சிவன் ஆலயத்தில், விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றதன் பின்னர் கல்வியங்காடு சுதா ரஜீவன் குழுவினரின் மங்கல இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 13 ஆவது சர்வதேச ஆய்வரங்கு



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடம் ஏற்பாடு செய்திருந்த' நவீன சாதாரண நிலைக்கு உருமாறுதல்: மேலாண்மை மற்றும் வர்த்தகத்தில் புதுமை, ஒருங்கிணைப்பு, மற்றும் நிலைத்தன்மை" (Navigating New Normalcy: Innovation, Integration and Sustainability in management and commerce) எனும் தொனிப்பொருளிலான 13 ஆவது சர்வதேச ஆய்வரங்கு (AiRC 2024) பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் ஆய்வரங்கின் தலைவர் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி, பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் நடைபெற்றது.

## பிரித்தானியவின் முதன்மைச் செயலாளர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர்மருதலிங்கம் பிரதீபன் வரவேற்று அழைத்துச் சென்று, அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் முதன்மைச் செயலாளர் வினாவிய போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வார காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசி யம் பற்றி தெரிவித்த அரசாங்க அதிபர், வெள்ள அனர்த்தத்தினால்

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் இது வரை ரூபா.50 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டது எனவும் இதில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் என்பவற்றுக்காக ரூபா 49 மில்லியன் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், ரூபா 1 மில்லியன் உடனடி அனர்த்த தணிப்பு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்ததுடன், எமது அரசாங்கத்திடம் மாவட்டத்துக்கான தேவைப்பாடுகளை முன்வைத்த போது, நாம் கோரிய நிதி ஒதுக்கீட்டினை சம்பந்தப்பட்ட அமைச்சு விரைவாக விடுவித்தமையானது மகிழ்ச்சியான விடயம் எனவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

மேலும், மீள்குடியேற்ற நிலவரங்கள், அஸ்வெசுமத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விபரங்களை அரசாங்க அதிபரிடம் முதன்மைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார். இதன் போது, யாழ்ப்பாண மாவட்ட த்திற்கான வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டதுடன், மீள்குடியேற்ற வேலைத் திட்டங்கள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருவதாகவும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணியற்ற குடும்பங்களுக்கு காணி அரசாங்கத்தின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். இதன் போது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகளுக்கு தேவையான வைத்திய உபகரணங்களின் தேவைப்பாடுகள் உள்ளதாகவும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் முதன்மைச் செயலாளரிடம் அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்தார். (ஐ-12)

## மழை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமேல் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடுவதுடன், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

(ஐ-05)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2024 இல் வெளியிடப்பெற்றது.